தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL


# அனைத்துலகத் தேர்வு

# 2010

# தமிழ்மொழி

## ஆண்டு 10

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்: | | | | | | | | |

மொத்தப்புள்ளிகள் : 100

அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |
| 6 | | | |
| 7 | | | |
| மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தாய் தந்தை தமையன் அரசன் ஆசிரியன் ஆகிய ஐவரும்

அ) ஐவர் ஆ) ஐம்பேராயம் இ) ஐங்குரவர் ஈ) ஐம்முதுவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. வாய்ப்பவளம் என்பது

அ) உருவகம் ஆ) உயர்வுநவிற்சி இ) தற்குறிப்பேற்றம் ஈ) உவமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தொகைநூலுக்கு எடுத்துக்காட்டு

அ) குறுந்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) திருக்குறள் ஈ) கொன்றைவேந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கழகவிலக்கியங்களில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உள்ள காதல் பற்றிக் கூறும் துறை

அ) புறம் ஆ) அகம் இ) அறம் ஈ) மறம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. கழகக்காலத் தமிழர் வாழ்க்கை இதையொட்டி இருந்தது.

அ) போரை ஆ) போட்டியை இ) இயற்கையை ஈ) செயற்கையை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தமிழில் முதலெழுத்துகளின் எண்ணிக்கை

அ) பன்னிரண்டு ஆ) பதினெட்டு இ) இருநூற்றுப்பதினாறு ஈ) முப்பது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. ஒரு சொல்லியத்தின் கருத்தை முடித்து நிற்பது

அ) பயனிலை ஆ) அடைமொழி இ) எழுவாய் ஈ) சொற்றொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. கனகவிசயரைக் கொண்டு கல் காவுவித்தவன்

அ) இளங்கோ ஆ) நெடுஞ்செழியன்

இ) செங்குட்டுவன் ஈ) வில்லவன்கோதை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. சிலப்பதிகாரம் என்ற பகுசொல்லைப் பிரித்தால்

அ) சிலம் + பதிகாரம் ஆ) சிலம்பு + அதிகாரம்
இ) சிலப்பு + அதிகாரம் ஈ) சில + பதி + காரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. செந்தமிழ் மொழியே நீ வாழ்க! இச்சொல்லியம்

அ) ஏவல் ஆ) செப்பு இ) வியங்கோள் ஈ) வினா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. பொருட்பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) பூஞ்செடி ஆ) பள்ளி இ) பொங்கல் ஈ) மாலைப்பொழுது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. தாமரை ஒரு பூ. தாவுகிற மரை (விலங்கு) என்றும் பொருள்படும். இது

அ) தனிமொழி ஆ) பொதுமொழி இ) ஒருமொழி ஈ) மருமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. எமது முந்தைத் தமிழகத்தைக் கடல் விழுங்கிவிட்டது. அக்கடல்

அ) அத்திலாந்திக் மாவாரி ஆ) பசுபிக்மாவாரி

இ) ஆர்க்டிக்மாவாரி ஈ) இந்துமாவாரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. குமரிக்கண்ட அழிவு பற்றிய செய்தியைக் கூறும் தமிழ் இலக்கியம்

அ) தொல்காப்பியம் ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) மகாவம்சம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பெற்றான். இவ்வினைச்சொல்

அ) தெரிநிலை வினைச்சொல் ஆ) குறிப்பு வினைச்சொல்

இ) குறைவினைச்சொல் ஈ) எதிர்மறை வினைச்சொல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. அடிமை வாழும் பூமியெங்கும் எது வேண்டும் என்கிறார் கவிஞர் கண்ணதாசன்?

அ) சண்டை ஆ) தேர்தல் இ) விடுதலை ஈ) மாநாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. செய்வினை செயப்பாட்டு வினையாகும்போது இடம்பெறும் விகுதி

அ) ஆல் ஆ) படு இ) பட்டது ஈ) படுதல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ஒரு மக்கள் கூட்டம் தன் ஆள்புலத்தை விட்டு வேறோர் ஆள்புலத்திற்கு செல்வது

அ) குடியேற்றம் ஆ) சுற்றுலா இ) நாடுபிடிப்பது ஈ) புலப்பெயர்வு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் அழிந்ததற்குக் கரணியம்

அ) ஆரியர் வருகை ஆ) வெள்ளப்பெருக்கு

இ) கடற்கோள் ஈ) உள்நாட்டுப்போர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கடந்த கால்நூற்றாண்டு காலமாக ஈழத்தமிழர் புலப்பெயர்விற்குக் கரணியம்

அ) வேலையின்மை ஆ) உணவுப் பற்றாக்குறை

இ) சிங்களப் பேரினவாதம் ஈ) குழுச்சண்டை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. மயிர் பிடுங்கப்பட்டால் உயிர் வாழாது இறக்கும் விலங்கு

அ) கவரிமா ஆ) கலைமான் இ) காளைமாடு ஈ) கடமா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. தன்னிலையில் தாழாதிருப்பதும் தாழ்வு வரின் உயிர் வாழாது இருப்பதும்

அ) வீரம் ஆ) மானம் இ) வெட்கம் ஈ) சினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. தரப்பட்டுள்ளவற்றுள் உரிச்சொல்

அ) கடகட ஆ) அன் ஆன் இ) போலும் தோறும் ஈ) உறு சால

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. பனை + ஓலை இச்சொற்களைப் புணர்த்தினால்

அ) பனோலை ஆ)பனவோலை இ) பனையோலை ஈ) பனமோலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. கொங்கு தேர்ந்து வாழ்வதும் அழகிய சிறகை உடையதும்

அ) தும்பி ஆ) வண்டு இ) தேனீ ஈ) பூச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தமிழே உலகின் முதன்மொழி என்று நிறுவியவர்

அ) தனிநாயகம் ஆ) தேவநேயப் பாவாணர்
இ) விபுலாநந்தர் ஈ) கனக சுப்புரத்தினம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. முல்லைப்பல் இச்சொற்றொடர் எத்தொகை

அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
இ) வினைத்தொகை ஈ) தொகையல்ல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. வன்னிமக்கள் முள்ளுக்கம்பி முகாங்களில் அடைபட்டுக் கிடப்பதற்குக் கரணியம்

அ) பகைவருக்கு அச்சம் ஆ) வெள்ளப்பெருக்கிலிருந்து தப்ப

இ) அரச பயங்கரவாதம் ஈ) உணவு மருந்துக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. நிலமும் பொழுதும் என்பது நானிலப் பாகுபாட்டில்

அ) முதற்பொருள் ஆ) கருப்பொருள் இ) உரிப்பொருள் ஈ) உறுபொருள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. மீன்பாடும் வாவி அமைந்துள்ள பட்டினம்

அ) திருகோணமலை ஆ) மன்னார் இ) முல்லைத்தீவு ஈ) மட்டக்களப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பொய்யும் புனைகதையுமான மகாவம்சம், இராமாயணம் போன்ற நூல்களால் தமிழர் வரலாறு திரிக்கப்பட்டு மறைக்கப்பட்டது. இராமாயணம் குமரிக்கண்டம் மூழ்கிப்போனதன் பின்னான தமிழகத்தில் குரங்குகளும் கரடிகளும் கழுகுகளும் வாழ்ந்ததாகக் கூறுகிறது. மகாவம்சம் இலங்கையில் மாயமாந்தர்கள் வாழ்ந்ததாக எழுதியுள்ளது. மகாவம்சம் கூறும் கி.மு. ஆறாம் நூற்றாண்டு உலகப்புகழ் பெற்ற மூவேந்தர்கள் ஆண்டுகொண்டிருந்த காலம். இது வரலாறு. கி.மு. ஏழாம் நூற்றாண்டில் தொல்காப்பியம் எழுதப்பட்டது. தமிழர் கல்வியறிவிலும் நாகரிகத்திலும் உச்சத்தில் இருந்த காலம். அப்படியிருக்க தமிழருக்கு எதிரான இக்கதைகளை எப்படி வெளிவரவிட்டனர் என்று புரியவில்லை. இதற்குக் கரணியம் தமிழர் தமிழைக் காக்க முனையாமையே. இமயம் வரை படையெடுத்தும் கனகவிசயன் தலையில் கல்காவுவித்து வந்து, கண்ணகிக்குச் சிலையெடுத்தும் வீரம் காட்டினரே அன்றி தமிழைக் காக்க முயலவில்லை. வெறும் முரட்டு வீரம் இருந்ததே தவிர அவர்க்கு முன்யோசனை இருக்கவில்லை. கி.மு.களில் இன்று நயினாதீவு எனப்படும் அன்றைய மணிபல்லவத்தில் புத்தவிகாரம் இருந்ததும் மகாவம்சத்திற்கு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னரே புத்தநெறிக்காக மணிமேகலை எழுதப்பட்டதும் வரலாறு. அப்படியிருந்தும் கூட தமிழரை வந்தேறுகுடி என்று சிங்களம் சொல்கிறதென்றால் என்னே பொய்யுரை! அதைக் கேட்டுக்கொண்டு சிங்கள இனவாதிகளோடு கொஞ்சிக் குலாவும் தமிழர் இருக்கின்றனரே! அதுதான் தமிழருக்கு இந்நிலை. உலகில் முதற்றோன்றி உலகாண்டு, உலகின் முதன்மொழியை மொழிந்த இனம், இன்று உலகெங்கும் அடிமைப்பட்டுக் கிடக்கிறது.

1. இராமாயணம் பழந்தமிழகத்தில் யார் வாழ்ந்ததாகக் கூறுகிறது?

____________________________________________

____________________________________________

2. தொல்காப்பியம் எழுதப்பட்ட காலம் எது?

____________________________________________

____________________________________________

3. நயினாதீவின் பண்டைய பெயர் என்ன?

____________________________________________

____________________________________________

4. தமிழரின் இழிநிலைக்குக் கரணியம் யார்?

5. எவ்வினம் உலகில் முதல் தோன்றி முதன்மொழியைப் படைத்தது?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. 'தும்பி காலை செவ்வழி முரல்வ சோலை' என்பதை விளக்குக.

2. சேரன் செங்குட்டுவனது வஞ்சினத்தால் விளைந்தது என்ன?

3. குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாக இன்றுமுள்ள தமிழ்நாடுகள் எவை?

4. உலகில் தோன்றி மறைகின்ற கோடானுகோடி பேரில் மக்கள் மனதில் நிலைத்து நிற்பவர் யார்?

______________________________________________

______________________________________________

5. ஈழத்தமிழரது புலப்பெயர்விற்குக் கரணியம் என்ன?

______________________________________________

______________________________________________

6. சிங்கள அரசு தமிழருக்கு இழைத்த கொடுமைகள் யாவை?

______________________________________________

______________________________________________

7. தேவநேயப்பாவாணர் தமிழே உலகின் முதன்மொழி என்று எவ்வாறு நிறுவினார்?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடையெழுதுக.

நாளை மலரும் ஈழம் என்று வீட்டிற்கு வீடு ஒரு பிள்ளை
நாட்டிற்கு வேண்டுமென்று பார்த்துப் பார்த்து வளர்த்த
எம் பாசச் செல்வமுன்னை கட்டி அணைத்து முத்தமிட்டு
களத்திற்குப் போ என்று வீரமுடன் சொன்னபோது
கலங்கவில்லை எங்கள் மனம்

வீரமுடன் களத்தினில் நீ வெற்றிகளைக் குவித்தபோது
உனையீன்ற பொழுதை எண்ணி எங்கள் மனம் நெகிழ்ந்ததுண்டு
இனவெறி யரது இழிவான செயல் கண்டு
ஓடி ஒழியாது எதிர் மோதி மோதி நின்று
தாயகத்தின் போர்க்களத்தில் விழுப்புண்ணோடு சாய்ந்தாயென்று
இடிபோன்ற செய்தி எம் இதயத்தைத் தாக்கியது

Il y a différentes origines dans ce monde. Aider, respecter les autres, comprendre et compatir envers les personnes qui souffrent, sont communs dans toutes les origines. De la même façon, les enfants suivent la mode de vie des aînés, des parents. Une famille ayant une bonne manière de vivre, ont des enfants de bonne manière et progresserons dans la vie. Alors que dans une famille n'ayant pas de bonne manière de vivre, ont des enfants désordonné, mal éduqué. Ceci est également commune dans toutes les origines. Améliorons les bonnes manières de vivre, et vivons avec un comportement aimable.

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. இலங்கையின் விடுதலையும் ஈழத்தமிழர் வாழ்வும்.
2. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர்.
3. மூன்றரை இலக்கம் தமிழ்மக்களும் அவர்கள் முகாம்களில் வாழ்ந்த வாழ்வும்.
4. கைய்ட்டி (Haiti) பூகம்பம். ஐசலாந்து (*Island*) எரிமலைக் குமுறல். இவற்றுடன் இணைத்து உலகின் எதிர்காலம் பற்றிய உமது எண்ணங்களைத் தருக.